**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 586/2016**

Deposition of the witness for Prosecution **PW4**
Name : **முருகன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (09.02.2026)

Accused absent, petition filed and allowed

<u>முதல் விசாரணை</u>

1. நான் பிரானுர் பார்டரில் குடியிருந்து லோடுமேனாக வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து நாச்சியார் எனது அத்தை. எதிரியை தெரியும். சுமார் 4 வருடத்திற்கு மேல் ஒருநாள் நான் லோடுமேன் வேலை பார்த்துகொண்டிருந்தேன். கொட்டாகுளம் ரோட்டில் எனது அத்தைக்கு அடிபட்டதாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் எனது அத்தையை தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விபட்டு நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது அத்தை இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. கடந்த 22.07.2016ம் தேதி இரவு 07.30 மணிக்கு நானும், சுப்பையாவும் மாரியப்பன் வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. சுப்பையா வீட்டு முன்பு நாச்சியார் நடந்து சென்றுகொண்டிருந்தபோது மேற்கிலிருந்து கிழக்காக எதிரி ஆட்டோவை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹார்ன் அடிக்காமலும் ஓட்டிவந்து நாச்சியார் மீது இடித்து நாச்சியாருக்கு தலை, கன்னம், கால்கள் ஆகிய

இடங்களில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்த நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக தென்காசி அரசு மருத்துவமனைக்கு நாச்சியாரை சிகிச்சைக்காக அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.02.09 16:35:49 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai